DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW 11 |
| Name | : | திரு.தங்கவேல் |
| Father's Name | : | S.செல்லமுத்து |
| Village | : | கள்ளகுறிச்சி |
| Taluk | : | கள்ளகுறிச்சி |
| District | : | கள்ளகுறிச்சி |
| Profession | : | காவல்துணை கண்காணிப்பாளர் |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 23rd day of October 2025.
எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது கள்ளகுறிச்சி மாவட்டம் கள்ளகுறிச்சி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.09.2020 ம் தேதி அஞ்செட்டி காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த போது அஞ்செட்டி காவல் நிலைய குற்ற எண்.17/2020, இ.த.ச பிரிவுகள் 392 r/w 397 வழக்கினை பதிவு செய்து , புலன் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் ரவிக்குமார் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் மேற்கண்ட வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் சாட்சிகள் 1 முதல் 10 வரை உள்ளவர்களை விசாரணை செய்த போது, மேற்கண்ட சாட்சிகள் ஆய்வாளர் ரவிக்குமாரிடம் கூறிய வாக்குமூலங்களையே என்னிடமும் கூறியதால் மேற்கொண்டு எவ்வித வாக்குமூலமும் நான் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரி பாரதிமோகன் என்பவர் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பெயரில் பிணையில் இருந்தவரை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தபோது, எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் தரமறுத்துவிட்டார். அதனால்

அவரிடமிருந்து வழக்கு சொத்தினை கைப்பற்ற இயலவில்லை. 01.02.2021 ம் தேதி இவ்வழக்கின் சட்டபிரிவினை 392 r/w 397 இ.த.ச பிரிவினை சட்டபிரிவு 392, 397, 341 இ.த.ச ஆக சட்டப்பிரிவினை மாற்றி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 341 ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் இவ்வழக்கை சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. முறையாக விசாரணை செய்திருந்தால் இவ்வழக்கின் தன்மை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. கையிருப்பு சாட்சிகளை வைத்து காவல் நிலையத்திற்கு வரவழைத்து காவல் நிலையத்திலேயே பொய்யாக வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளிடம் காவல் நிலையத்திலேயே கையெழுத்து வாங்கியதால் தான் நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.